
விலை ரூபா: 5.00 பக்கங்கள் எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

லக்ஷறி
பல்கட்டும் இடம்
LUXURY
DENTAL
WORKS
சிங்கப்பூர் நுட்பமுறையில் சங்குப்பற்கள் கட்டுதல் கிளிப் போடுதல் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.
குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 18 சனிக்கிழமை (02.03.2002) தொலைபேசி 3378 ஒலி 73




## தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தி

# வவுனியாவில் வரலாறு காணாத பொங்கு தமிழ் எழுச்சி பிரவாகம்

### 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்பு

(வவுனியா நிருபர் ரி. விவேகராசா)

**தமிழ் மக்களின் அபிலாசைகளையும், சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி தமிழீழம் எங்கும் உணர்வுபூர்வமாக எழுச்சி பிரவாகத்துடன் அனுஷ்டிக்கப்பட்டு வரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு வன்னிப் பெருநிலப்பரப்பின் வவுனியா மையத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.**

**1982 ம் ஆண்டு பண்டாரவன்னியனின் சிலை திறப்பு விழாவும் அதன் பின் அங்கு இடம் பெற்ற முத்தமிழ் விழாவிற்கும் பின்னர் நேற்றைய பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு அலைமோதும் ஜன சமுத்திரத்தின் மத்தியில் இடம் பெற்றுள்ளது.**

தமிழ் மக்களின் அபிலாசைகளையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கிகரிக்க வேண்டுமென்று கோரி நேற்று வவுனியா நகரில் பெருமெடுப்பில் உணர்வு பூர்வமாக பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் வவுனியா நகரின் ஐந்து பிரதான வீதிகளில் இருந்து மக்கள் எழுச்சி ஊர்வலங்கள் பிற்பகல் 3 மணிக்கு தமிழரின் பாரம்பரிய நிகழ்வுகளான கரகாட்டம், காவடி, போன்ற நிகழ்வுகளுடன் ஆரம்பமாகியது

மன்னார் வீதி, யாழ் வீதி, கண்டி வீதி, ஹொறவப்பொத்தானை வீதி, பூந்தோட்டம் சந்தி ஆகியவற்றிலிருந்து அலங்கார ஊர்திகளுடன் புறப்பட்ட மக்கள் எழச்சி ஊர்வலங்கள் மாலை 6 மணியளவில் வவுனியா நகர சபை மைதானத்திற்கு வந்து சேர்ந்தது.

(8ம் பக்கம் பார்க்க)




வவுனியா பொங்கு தமிழ்க் காட்சிகள்

# பொது நலவாய மாநாட்டிற்கு ஜனாதிபதி செல்லவில்லை

## கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்படுவது காரணமாம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் தற்போது அதிகரித்துள்ளமையால் இன்று அவுஸ்ரேலியாவில் ஆரம்பமாகவுள்ள பொது நலவாய அமைப்புக்களின் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாதென ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

இது குறித்து கடிதமொன்றை பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் டொன்சி மக்சினிக்கு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களும் தொண்டர்ளும் ஐக்கிய தேசியக் கட்சியினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு

(8ம் பக்கம் பார்க்க)

# விமானப் பயணிகளுக்கான பயண ஒழுங்குமுறை

(யாழ்ப்பாணம்)

விமானம் மூலம் கொழும்புக்குச் செல்வதற்காக பெப்ரவரி 28ம் திகதியும், மார்ச் முதலாந் திகதி முதல் விமானத்திலும் பயணம் செய்ய பயணச் சீட்டைப் பெற்றவர்களை இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கும், மார்ச் முதலாந் திகதி 2ம், 3ம், 4ம், 5ம் விமானங்களில் பயணம் செய்வதற்குப் பயணச் சீட்டைப் பெற்றவர்களையும் மார்ச் இரண்டாம் திகதி (இன்று) 1ம், 2ம் விமானங்களில் பயணம் செய்வதற்குப் பயணச்

(8ம் பக்கம் பார்க்க)

# பாசையூர் பகுதியில் புலி உறுப்பினர்கள்

(கொய்யாத்தோட்டம்)

தமிழிழ விடுதலைப் புலிகளின் ஆறு உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று நேற்று பாசையூர்ப் பகுதிக்கு வந்து அங்கு காவற் கடமையில் இருந்த இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக பாசையூர் இறங்கு துறையில் வந்திறங்கிய இக் குழுவினர், சாதாரண உடையில் ஆயுதங்கள் எதுவுமின்றி சயனற் குப்பிகள் மாத்திரம் வைத்திருந்தனரென கூறப்படுகின்றது.

(8ம் பக்கம் பார்க்க)

# வேட்புமனு நிராகரிப்பு சட்டரீதியற்றது

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஏழு பிரதேச சபைகளுக்குத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை சரியானது அல்ல எனவும், அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறும் கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இம்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 7 பிரதேச சபைகளுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை தேர்தல் ஆணையாளர் நிராகரித்திருந்தார். இதனை அடுத்து தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தன. (ந)

## சிறுவிளம்பரம்


### உளவியற்கவிதைகள்

மீசாலை நா. துஷாந் எழுதிய உன்மையில் உலகம் கவிதைத்தொகுப்பு இப்போது உங்கள் கைகளிலும் கிடைக்கும் விலை ரூ 20 மட்டுமே. (4756)


## உடற்கல்வி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று உடற்கல்வி செயலமர்வும் செயன்முறைபயிற்சியும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள சிரேஷ்ட விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர் றொகான் இராஜசிங்கம் கலந்து கொள்வார்.

செயலமர்வுக்கான ஏற்பாடுகளை கல்வியியற் கல்லூரி உடற்கல்வி விரிவுரையாளர் சராபுவனேந்திரன் மேற்கொண்டுள்ளார். (இ)

## குஜராத்தில்புகையிரதம்தீயிடப்பட்டசம்பவம்
# இந்தியாவில் மதக்கலவரம் வெடித்தது
# 137பேர் உயிரிழப்பு 100பேர் காயம்
## கலவரத்தை அடக்க இராணுவம் குவிப்பு

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் இராமபக்தர்கள் பயணம் செய்த புகையிரதம் தீவைக்கப் பட்டசம்பவத்தையடுத்து இந்தியாவில் பெரும் மதக் கலவரம் வெடித்துள்ளது.

இருநாட்களாக இந்திய மாநிலங்களில் தொடரும் மத வன்முறைச் சம்பவங்களால் இதுவரை 137பேர்உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகிறது 100ற்கும் அதிகமானோர் கடுங்காயங்களுக்கு உள்ளாகி வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகமதாபாத் சமந்தரபுர நகரில் வன்முறைக் கும்பலொன்று புகுந்து வீடுகளை தீவைத்துக் கொளுத்தியுள்ளது.அத்துடன் பல்வேறு இடங்களிலும்மோதல் வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது.

நிலைமைகட்டுமீறியுள்ளதால் முக்கியஇடங்களின் பாதுகாப்புக்களை பொலிசாரிடம் இருந்து இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளனர்.

மேலும் வன்முறைகள் தொடர்வதைத் தடுக்கும் வகையில் 38நகரங்களில்ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.அத்துடன் வன்முறையில்ஈடுபடுவோரை கண்டஇடத்தில் சுடுவதற்கும் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள்மத்தியில் எழுந்துள்ள அச்சம் காரணமாக இந்து முஸ்லிம் மக்கள்வாழும் பகுதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும்வகையில் இராணுவத்தினர்வியூகம் அமைத்துள்ளனர்.

மத அமைப்புக்களின் முக்கிய நிலையங்கள்,முக்கிய போக்குவரத்துச் சாலைகள் போன்றவற்றில் சோதனைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளதுடன் ஆயுதம் தாங்கிய பொலிசாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டின் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைச்க எடுக்கப் படும் நடவடிக்கையை அரசு நம்பிக்கையுடன்முறியடிக்கும் எனவும் மதக்கலவரங்களைத் தூண்டி நாட்டை கூறாக்கிப் பறிக்க முயலுபவர்களுக்கு தகுந்தபாடம் புகட்டவும் அரசு தயங்காது எனவும் பிரதமர் வாஜ்பாய் எச்சரிக்கைவிடுத்துள்ளார். (உ-7)

# எழுதுமட்டுவாழ் போரில் அரசுக்கு ஞானம்பிறந்தது
## பேராசிரியர் மோகனதாஸ் உரை

(வவுனியா)

பொங்கு தமிழ் எழுச்சியில் அலையலையாக மக்கள் திரண்டு வந்திருக்கிறார்கள் அன்று போர்உச்சகட்டத்தில் இருந்த வேளையில் யாழ் பல்கலைச் கழக மைதானத்தில் தமிழ் பொங்கியது.வீர ஆவேசத்துடன் பொங்கு தமிழ் எல்லாத்திசையும் பரவியதுபோர் அதி உச்ச கட்டத்தை அடைந்து ஒரு நல்ல முடிவுக்கு வந்தது. போர் நிறுத்த உடன்படிக்கையும் கைச்சாத்தாயிற்று ஆனால் போராட்டத்தின் பலன் கையில் கிடைக்க வேண்டும் அதற்கு இன்னும் நீண்ட தூரமுண்டு அந்த வெற்றிக்கு போராட வேண்டியுள்ளது அது அகிம்சைப் போராட்டமாகலாம்

பொங்கு தமிழ்எழுச்சிப்போராட்டமாகலாம் இன்னும் வேறு வடிவத்தில் இவை முன்வைக்கப் படலாம் அன்று யாழில் நடந்த பொங்குதமிழ் எழுச்சியின் புற நிலைக்கும் இன்றைய வன்னி பொங்கு தமிழ் எழுச்சி புற நிலைக்கும் வித்தியாசமுண்டு. ஆனால் மக்களின் உற்சாகம் பங்கேற்பு ஒரேமாதிரியாகவே உள்ளது.

இவ்வாறு யாழ்ப்பல் கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் தெரிவித்தார்.

வவுனியாப் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய பேராசிரியர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

**சமாதானத்திற்கு மக்கள் ஆணை**

இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை இங்கிருப்பது பயங்கரவாதிகளின் பிரச்சினையே என்று கூறிபவர்கள் இன்று தமிழர்களுக்கு பிரச்சினை யுண்டு அதனால் சிங்கள மக்களுக்கும் ஏனை யோருக்கும் பிரச்சினையுண்டு என்றுணர்ந்து சிங்கள மக்களே அரசுக்கு சமாதானத்திற்கான ஆணையை வழங்கியுள்ளார்கள் என்றால் அதுதமிழர்களின் சாதனையையே குறிக்கும்.

இலங்கை சுதந்திரமடைய தமிழ்ப் பெரியார்கள் பாடுபட்டார்கள். பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்க முடியவில்லை. தமிழர்கள் மாத்திரமன்றி சிங்களவர்களுக்கும் அனுபவிக்க முடியவில்லை ஒருவருக்கொருவரில் நம்பிக்கையில்லை முறைக்கு முறை வந்த அரசமைப்பு சட்டத்தால் தமிழர்களின் சமத்துவம் மறுக்கப்பட்டது. கல்வி மற்றும் உத்தியோகம் மறுக்கப்பட்டன ஆரம்பத்தில் அகிம்சை வழியில் போராடினோம் பல ஒப்பந்தங்கள் உருவாகி அவைவந்த வழியே திரும்பிப் போய்விட்டன. சிங்களவர் இரண்டு கட்சியாகப் பிரிந்து ஒருகட்சி செய்வதை மற்றக் கட்சி ஏற்க வில்லை இதுமாறி மாறி அரங்கேறியது.

**எழுதுமட்டுவாழ் யுத்தம் ஞானத்தைக்கொடுத்தது**

அகிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வெடித்தது இதற்கு சிங்கள அரசியல்வாதிகளேகாரணம்தமிழர்களின்படைகள்நாளுக்கு நாள் வளர்ந்தன கெரிலாப் போராட்டம்மரபு வழிப் போராட்டமாக மாறியது இராணுவ முகாம்கள் அழிந்தன. மாங்குளம், முல்லைத்தீவு,புநகரிஎல்லாம் அழிந்தன பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டன. ஒரு அரசாங்கம் பெற்ற தோல்வியை மற்றைய அரசாங்கம் பாடமாக எடுக்கவில்லை நாம் வெல்லுவோம் என்றுஏட்டிக்குப் போட்டியாக வெளிக்கிட்டனர் இறுதியில் ஆனையிறவையும்தோற்றனர். பல்குழல் வசதிகளுடன் எழுதுமட்டுவாழில் நடந்த போரிலேயே அனைவரும் ஞானம் பெற்றனர்.

உலகமே வியந்து நின்றது போர் என்றால்,போர் என்று கூறியவர்களின் ஆவியும்திகைத்துப் போயிருக்கும்ஒருஇனத்தின் போராட்டம் ஒருஇனத்தின் உரிமைப் போராட்டம் என்பது தனியே ஆயுதங்களாலேயோ போராடுபவர்களின் எண்ணிக்கையிலேயோ தங்கியிருக்கவில்லை அது போராட்டத்தின் வடிவத்திலும் போராளிகளின் வீரத்திலும்அவர்களின் மன உறுதியிலும் தங்கியிருக்கிறது.

**தேசியத்தலைவரின் அறைகூவல்**

முதன்முறையாகதமிழ்த்தேசியத்தலைவர் நடக்கப்போகும் தேர்தல் சமாதானத்திற்காகவோ அல்லதுயுத்தத்திற்காகவோ என்பதை மக்களே தீர்மானிக்கட்டும் என்றுகூறினார். மக்கள்ஆணை சமாதானத்திற்கே எனத் தேர்தலில் நிரூபித்துவிட்டார்கள்.

தமிழர்களை தமிழர்களே ஆளும் தகைமை கிடைக்க வேண்டும்.சுயநிர்ணயஉரிமை இருக்கவேண்டும் பிரிக்கப் படாத வடகிழக்கு பிராந்தியம் தமிழர் தாயகமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அனைத்து தமிழ்க்கட்சிகளும் அதற்கான ஆணையைவழங்க வேண்டும் தடைநீக்கப்பட்ட நிலையில் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடக்கவேண்டும் இவையே எமதுதற்போதைய முக்கிய எதிர்பார்புக்களாகும் என்றார். (இ)

## டி.எம். தஸநாயக்காவுக்கு பிணை வழங்கப்பட்டது

(கொழும்பு)

புத்தளம் மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி எம்.பி.டி.எம். தஸநாயக்காவை கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று பிணையில் செல்ல அனுமதித்தது.

தேர்தல் வன்முறைகள் மற்றும்கொலைச் சம்பவங்கள் தொடர்பாகபுத்தளம்மாவட்ட எம்.பி. டி. எம் தஸநாயக்கா சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதனை அடுத்து அவர் தன்னைபிணையில் விடுமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவை விசாரித்த கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அவரை 25 ஆயிரம் ரொக்கப்பிணையிலும் இரண்டு ஆட் பிணையிலும் விடுதலை செய்தார்.

டி.எம்.தஸநாயக்காவை நாட்டைவிட்டு எங்கும் போகக் கூடாதென்றும்மாதத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும என்றும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

## விமானம் - துறைமுகங்கள் மீதான
# அபாயக் காப்புறுதிக் கட்டணம் மார்ச் 8ந்திகதி முதல் நீக்கப்படும்

(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த யுத்த அபாய மேலதிக காப்புறுதிக் கட்டணம் எதிர்வரும் 8ம் திகதி முதல் நீக்கவுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இது குறித்து அறிக்கையொன்றை பிரதமர் அலுவலகம் நேற்று வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட நிரந்தர போர் நிறுத்தத்தையும் தற்போதுள்ள சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு இக் காப்புறுதிக் கட்டணம் நீக்கப்படவுள்ளது.

இக் காப்புறுதிக் கட்டணத்தை நீக்குவதற்கு லண்டனில் உள்ள லொயிட்ஸ் காப்புறுதி நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில்யுத்த அபாய நிலைகாரணமாக இக் காப்புறுதி நிறுவனத்தில் அரசாங்கம் வைப்புச் செய்த ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீண்டும் அரசாங்கத்திற்கேகிடைக்கவுள்ளதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந 4)


### அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை

### கற்கை நெறிகள் வெற்றிடம் நிரப்பு பட்டியல் 2001/ 002

| கற்கைநெறி | பட்டியல் இல. | மாணவர்தொகை |
|---|---|---|
| பௌதீகவிஞ்ஞானம் | 04 | 30 |
| உயிரியல் விஞ்ஞானம் | 04 | 27 |
| விவசாய விஞ்ஞானம் | 03 | 13 |

மேற்படி கற்கை நெறிகளுக்கு குறிப்பிடப் பட்ட இலக்க வெற்றிடம் நிரப்பு பட்டியல் மூலம் குறிப்பிடப் பட்ட தொகை மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். விபரங்கள் கற்கை நெறிக்குரிய பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன.

தெரிவானமாணவர்கள்தங்கள்பதிவினை15.03.2002க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

01. 03. 2002 (கி-3618) பதிவாளர்


## அரசஅதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் தேர்தல் ஆணையாளரின் அவசர அழைப்பின் பேரில் நேற்றுப் பிற்பகல் கொழும்பு பயணமானார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்துஆராய்வதற்காகவே அரச அதிபர் அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாக யாழ்செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கல்விடிப்ளோமா இன்றுஆரம்பம்

(கொக்குவில்)

தேசிய கல்விநிறுவகத்தின் 2002-2003கல்வியாண்டுக்கான கல்விடிப்ளோமாகற்கை நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் பயிற்சிக்கட்டணத்தை வங்கியில் செலுத்தி பற்றுச்சீட்டினை இன்று9.30 மணிக்கு யாழ்இந்துக்கல்லூரி நிலையத்தில் ஒப்படைக்குமாறும்,

இன்றையதினமே கற்கை நெறி ஆரம்பமாகும் என்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ந.வில்வநாதன் அறிவித்துள்ளார். (உ-243)

## வேலணைபிரதானவீதி பாவனைக்கு அனுமதி

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள பிரதான வீதி பொதுமக்கள் பாவனைக்காக நேற்றுத் திறந்து விடப்பட்டுள்ளது.

இவ்வீதியூடாக காலை6.00 மணிதொடக்கம் மாலை 6.00 மணிவரை பிரயாணம் செய்யமுடியும.

இவ்வீதியால் செல்வோர் ஒரு சோதனைச் சாவடியில் மட்டும் உடற் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர்.

கடந்த பதினொரு வருடங்களின் பின் இவ்வீதி நேற்று பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-75)

# விளையாட்டு தொடர்பான பயிற்சிகளை வழங்க பயிற்றுநர் பற்றாக்குறை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 346 விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கும் மாவட்ட ரீதியிலுள்ள 13 விளையாட்டு சங்கங்களிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கும் விளையாட்டுக்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்குப் போதிய பயிற்றுநர்கள் இல்லாமை பெரும் பிரச்சினையாக இருந்து வருவதாகத் தெரியவருகின்றது.

இவ் விளையாட்டுக் கழகங்களுள் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளில் செயல்பட்ட விளையாட்டுக் கழகங்கள் யுத்தம், இடம்பெயர்வுகள் காரணமாக செயற்பட முடியாதநிலையில் இருக்கின்றன.

அதேவேளை ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இருக்கின்ற விளையாட்டுக் கழகங்களும் குடாநாட்டில் நிலையற்ற சூழ்நிலைகள் காரணமாக நல்ல முறையில் இயங்குவதற்கான வாய்ப்புக்கள் பெரியஅளவில் ஏற்படவில்லை எனவும் அறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க இவ் விளையாட்டுக் கழகங்களுக்கு தமது வீரர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்குரிய பயிற்சி நிலையங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இல்லாமை இருப்பதுபற்றியும் தெரியவருகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்திருந்த இளைஞர் விவகார விளையாட்டு அலுவல்கள் அமைச்சரால் கொண்டுவரப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் உயர்தரப் பாடசாலைகளுக்கே வழங்கப்பட்டன எனவும, இதுவிடயத்தில் விளையாட்டுக்கழகங்கள் புறக்கணிக்கப் பட்டதாகவும்கூறப்படுகின்றது. (உ-77)

# முகாமைத்துவடிப்ளோமா பரீட்சைஇன்றுநடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவ டிப்ளோமா மட்டம்-III, மட்டம்-IV பரீட்சைகள் திட்டமிட்டபடி இன்று நடைபெறுமென யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ஆர். ஞானேந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு - யாழ். விமான சேவைகள் தடைப்பட்டதனால் வினாத்தாள்கள்நேற்று மாலை வரை யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவில்லை எனவும்,

இது தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுடன் தொடர்பு கொண்டதை அடுத்து உடனடியாக வினாத்தாள்களை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்ததாக அவர் கூறினார். (உ-5)

# இரண்டாம் கட்ட அபி. தொண்டர்களுக்கு மீண்டும் பயிற்சி வகுப்பு

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இரண்டாங் கட்ட அபிவிருத்தி தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மீண்டும் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களை இப் பயிற்சிவகுப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். (செ-232)

# ஐ.ஐ. எஸ். நிறுவனத்தில் கணனிக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நவீன உலகின் தகவல் தொழில் நுட்பத்தின் பரிமாணங்களை குடாநாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டும வகையில், இம்மாதம் 23, 24 ,25, 26 ஆம் திகதிகளில் ஐ. ஐ. எஸ். நிறுவனதலைமைஅலுவலகத்தில் கணனிகண் காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

நவீன கணனி உதிரிப்பாகங்களின் அறிமுகங்கள், மாணவர்களுக்கு பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல், துறைசார் வல்லுநர்கள், கல்விமான்களின் கருத்துரைகள், கலந்துரையாடல்கள் ஆகியனவும் அன்றைய நாட்களில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (உ)

# யூரியா தட்டுப்பாடு தொடர்கிறது

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் யூரியா உரத்திற்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

மரக்கறி செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யூரியா உரம் கொழும்பில் இருந்துதருவிக்க யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (உ-232)

## பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

(வண்ணார்பண்ணை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபை தெரிவும் நாளை மு. ப. 10. 00 மணிக்குகாரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய நடராசா மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சோ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3-109)

## சொந்த இடத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

மீசாலை மேற்கு ஐக்கிய நாணய சிக்கன சேமிப்பு வங்கி மீளவும் தனது சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாக சங்கத்தின் தனாதிகாரி எம். வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார். (உ-124)

# விளையாட்டுச் செய்திகள்

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 4.30மணிக்கு ஆனந்தா வி.க. எதிர் வசந்தஸ்ரீ வி.க.ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் நாளை பி.ப 3. 30 மணிக்கு காங்கேசன்துறை ஐக்கிய வி·க எதிர் ஈவினை கலைமகள் வி. க, அராலி எ. எல் வி.க எதிர் ஏழாலை கண்ணகி வி.க ஆகியன மல்லாகம் ஸ்ரீ.பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## விளையாட்டு போட்டி

(கோப்பாய்)

நீர்வேலி கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயவருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டி, இன்று பி.ப.1.30 மணியளவில் அதிபர் சிவனேசன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-79)

## விளையாட்டு உபகரணம் கையளிப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு விளையாட்டு துறை அமைச்சர் ஜோன்சன் பேர்ணான்டோ, யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை மாணவப் பிரதிநிதிகளிடம் கையளித்துள்ளார். (உ-109)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு நவரட்ண ராஜா விளையாட்டுத்திடலில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார். (செ-9)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கம் நடாத்தும் 15, 17 வயதின் கீழ் கிரிக்கெட் போட்டியில் நாளை மறுதினம்,

15 வயதின் கீழ் எ பிரிவில்;

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் விக்டோறியாக் கல்லூரி அணி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திலும்,

15 வயதின் கீழ் பி பிரிவில்;

யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் யாழ். மத்திய கல்லூரி அணி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும்,

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி அணி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலும்,

17 வயதின் கீழ் பி பிரிவில்;

புனித பரியோவான் கல்லூரி அணி எதிர் யூனியன்கல்லூரி அணி புனித பரியோவான் கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ-3)

## வலைப்பந்தாட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில், நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு 17,19 வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்திற்கான இறுதிப்போட்டி ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.(உ-79)

★ ★

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு,

15 வயதுப் பிரிவில்;

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி,

17 வயது பிரிவில்;

கனகரட்ணம் ம. ம. வி எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி, பெரியபுலம் ம. வி எதிர் அரியாலை ஸ்ரீபார்வதி வித், இந்து மகளிர் கல்லூ எதிர் கொக்குவில் இராமக்கிருஷ்ணா, செங்குததா இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமக் கிருஷ்ணா,

19 வயதுப் பிரிவில்;

கனகரட்ணம் ம. ம. வி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா ஆகியன யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு வடமாநில மதுவரி உதவி ஆணையாளர் எஸ். சிவானந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (செ-19)

## ஆங்கிலப் படிப்புகள் வட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஆங்கில படிப்புகள் வட்டம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கு நாளை பி.ப 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் 'ஆங்கிலம் போதித்தலும் மொழி உள்வாங்கப்படுதலும் ஒரு நவீன எண்ணக்கரு' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக ஆங்கிலப் போதனாசிரியர் வி.பரந்தாமன் கருத்துரை வழங்கவுள்ளார். (உ-3)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகாவித்தியாலயத்தை மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு மேற்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பெற்றோர்கள், நிரந்தர ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அதிபர்பி. முத்துலிங்கம் அறிவித்துள்ளார். (செ)

## பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(வண்ணார்பண்ணை)

இங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசியமட்ட பொதுக்கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புதிய யாப்பும், நடைமுறை விதிகளும் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

இதனை அடுத்து புதிய யாப்பிற்கு அமைவாக யாழ். மாவட்ட கிளைக்கு உள்ளடங்கிய 14 பிரிவுகளுக்குமான பொதுக்கூட்டமும், நிர்வாக சபை தெரிவும் நாளை மு.ப 10.00 மணிக்கு அவ்வப் பிரிவுகளில், பிரிவுத்தலைவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-109)

## சுப்பிரமுனிய சுவாமிகள் திருவடி பூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகளின் சீடரும், அமெரிக்காவின் ஹாவாய்சைவஆதீனஸ்தாபகருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் மகா சமாதியடைந்ததை முன்னிட்டு, அவரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட கோப்பாய் பழைய வீதியில் உள்ள ஸ்ரீ சுபபிரமுனிய கோட்டத்தில் இன்று பி.ப 2 மணிக்கு திருவடி பூசை இடம்பெறவுள்ளது. (உ)

## விபத்தில் மாணவி காயம்

(புத்தூர்)

சைக்கிள்-கார் விபத்தில் காயமடைந்த பாடசாலை மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை வேளை நீர்வேலி வில்லுமதவடியில் ஏற்பட்ட இந்த விபத்துச் சம்பவத்தில், கோப்பாய்ய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு விளையாட்டுப் போட்டிக்கு சென்றுகொண்டிருந்த நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவியான எஸ். டர்சிகா என்பவரே காயமடைந்தவராவார். (உ-235)

### தீவகத்தில் 2 கிழமைகள் தங்குவதாயின்

# அல்லைப்பிட்டியில் அனுமதி பெற வேண்டும்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகம் சென்று 2 கிழமைகளுக்கு மேல் தங்குவோர் அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் அனுமதி பெற்றுச் செல்வதுடன்,

மீளக்குடியமரச் செல்பவர்களும் இதனைப் பெறவேண்டும் எனவேலணை கடற்படை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ரொனி பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதிக்கும் செல்பவர்கள் அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் அனுமதி பெற்றுச் செல்லும் நடைமுறை நேற்றுமுன்தினம் நண்பகலுடன் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, அங்கு வசிப்பவர்களுக்கான பாஸ் நடைமுறையில் எவ் விதமாற்றமும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-75

## மாணவர் அமைப்புக்களை ஒன்று திரட்டி நாட்டில் கலவரங்களை ஏற்படுத்த

# மக்கள் விடுதலை முன்னணி முயற்சி

(கொழும்பு)

அரசும் புலிகளும் முன்னெடுத்து வரும் சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும் வகையில் ஜே.வி.பி மாணவர் அமைப்புக்களைஒன்றுதிரட்டி வருவதாகவும்,

இதற்காக 'மவுபிம சுரக்கீமே சிஷ்ய வியாபாரய' (எம்.எஸ்.எஸ்.வி.) என்ற பெயரில் மாணவர் இயக்கமொன்றை உருவாக்கி நாட்டில் கலவரங்களை ஏற்படுத்த திட்டமிட்டு வருவதாகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரபல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களை அரசியல் நோக்கங்களுக்காக அணிதிரட்டும் இந்தச் செயலை பொறுப்பான கட்சிகள் கண்டு கொள்ளாமலிருக்கின்றன. பெரும்பாலும் சிந்தனையில் முதிர்ச்சி நிலையை அடையாத மாணவப் பருவத்தினரை இலகுவில் மூளைச் சலவைக்குட்படுத்தி தமது அரசியல் அனுகூலங்களுக்குப் பயன்படுத்துவது கண்டிக்கப் படவேண்டும்.

சிறுவர்களை படையில் சேர்ப்பதாக நாம் விடுதலைப் புலிகளை கண்டிக்கின்றோம். மாணவர்களை அரசியல் அனுகூலத்திற்காக அணிதிரட்டும் ஜே. வி. பியை என்னசெய்கிறோம்? இவ்வாறு அத்தவிரிவுரையாளர் வினாத்தொடுத்துள்ளார்.

மவுபிம சுரக்கீமே சிஷ்ய வியாபாரய பெப்ரவரி 24ஆம் திகதி சமாதான நடவடிக்கைகளுக்கெதிராக சுவரொட்டிப் பிரசாரத்தைச் செய்ததும், இவ்வியக்கத்தின் தலைவர் நளிந்த ஜயதிஸ்ஸ'நாம்பாடசாலை மாணவர்களுட்பட சகல மாணவர்களையும் அணி திரட்ட எண்ணியுள்ளோம். பிக்கு மாணவர்கள், பட்டதாரி மாணவர்கள்யாவரையும் அணிதிரட்டுவோம்' எனத் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் ஒருவர் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில்: அதே வரலாறு மீண்டும் மீண்டும்நடைபெறுகின்றது.

1987இலும் ஜே.வி. பி இத்தகைய இயக்கங்களை நிறுவியது ஜே. வி. பியின் வேட்டை நிலமாக பல்கலைக் கழகங்களேபயன்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார். (உ)

## சிரமதானம்

(கொக்குவில்)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய சாரணர்களால், சாரணர் தினத்தை முன்னிட்டு பாடசாலைச் சூழல் சிரமதானம் மூலம் நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டது. (உ-243)

## தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் வீதி ஒழுங்குபேணுவதில்லையாம்

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதி தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் வீதி ஒழுங்கிற்கு சவால் விடுக்கும் வகையில் நடந்து கொள்வதாகஅப்பகுதி பொலிஸார் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வகுப்பு முடிந்து செல்லும் போது வீதியில் கும்பலாகச் செல்வதாகவும் இதுவே அங்கு வீதி விபத்துக்கள் அதிகரிக்கக் காரணம் எனவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-4)

## கடற்றொழில் வங்கிகள் 6 அமைக்க அனுமதி

(வண்ணார்பண்ணை)

கடற்றொழில் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் கிராமிய மீனவருக்கான 'இதிவர' கடற்றொழில் வங்கிகள் ஆறு அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூ. ச., சுழிபுரம் மேற்குகடற்றொழிலாளர் கூ. ச., நயினாதீவு வடக்கு கடற்றொழிலாளர் கூ. ச., வேலணை அம்பிகை நகர் கடற்றொழிலாளர் கூ.ச.,ஆகியன இதில் அடங்கும்.

தற்போது வங்கிக்கான கட்டட வேலைகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-109)

## அரசாங்க அச்சக தலைவர் அலுவலகம் உடைப்பு

(கொழும்பு)

பொறளையிலுள்ள அரசாங்க அச்சகத்தின் தலைவரின் அலுவலகம் உடைக்கப் பட்டிருப்பதாக பொறளை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஞாயிறு மாலைக்கும் திங்கள் காலைக்குமிடையில் உடைக்கப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்ட போலி ஆயிரம் ரூபா தாள்கள் பெருந்தொகையில் அந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் வாக்குச் சீட்டுகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

உடைக்கப்பட்ட நேரத்தில் அங்கு 60 பொலிஸார் கடமையிலீடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்வீட்டாரின் வேலையாக இருக்கலாம்என்று தலைவர் நெவில் நாணயக்கார கூறியுள்ளார். (உ)

## பழுதடைந்த பஸ்களால் பயணத்தில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

தென்மாரட்சிக்கானசேவையில் ஈடுபடும் வ.பி.போ. சபையின் சில பேருந்துகள் பழுதடைந்தவையாக உள்ளதால் பயணத்தில் தாமதங்கள் ஏற்படுவதாகதெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, யாழ். பிராந்தியத்திற்குமேலதிகபேருந்துகள் வழங்கப்படுமிடத்து பயணம் சீரடையும் என சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-124)

## 10 கோடி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து வடக்குகிழக்குப் பிரதேச இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இளைஞர் விவகாரங்கள் தொடர்பானநடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா மட்டக்களப்பு ஆகியபிரதேசங்களிலே இந்நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாண இளைஞர் விவகார அமைச்சினால் இதற்கென 10 கோடி ரூபா நிதி ஒதுக்குவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## திருடர் தலைதெறிக்க ஓட்டம்

(தும்பளை)

பருத்தித்துறை சந்தா தோட்டப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

நண்பகல் வேளை கோவிலுக்கு வீட்டார் சென்ற சமயத்தை பயன்படுத்தி வீட்டினுள் இறங்கிய திருடர்கள், எதிர்பாராத விதமாக உரிமையாளர் வீட்டிற்கு வருவதை கண்டு வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு தாம் கொண்டு வந்த அலவாங்கு, மற்றும் பொல்லுகளை கைவிட்டு தலைதெறிக்க ஓடித் தப்பியுள்ளனர். (உ-57,245)

## முதலுதவிப் பயிற்சி வகுப்பு

(கொக்குவில்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை, ''செஞ்சிலுவைக் கோட்பாடுகளைப் பரப்புதலும் முதலுதவிப் பயிற்சியும்'' எனும் தலைப்பில் பயிற்சி வகுப்பொன்றைப் பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்த உத்தேசித்துள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் பாடசாலையில் கல்வி கற்கும்15 தொடக்கம்18வயதுவரையுள்ளோர் இணைந்து கொள்ளலாம் எனயாழ்ப்பாணக்கிளையின் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (உ- 243)

## பாதை மீண்டும் திறக்கப்பட்டது

(புத்தூர்)

புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரிக்கு செல்லும் பாதை மீண்டும் பொதுமக்கள் பாவனைக்காக கடந்த 26 ஆம் திகதி முதல் திறந்து விடப்பட்டுள்ளது.

தென்மராட்சி இடம்பெயர்விற்கு பின்னர் இப்பாதையை இராணுவத்தினர் மட்டுமே பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-235)

## அபி.தொண்டர்களுக்கு செய்முறைப் பரீட்சை

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குபிரதேச செயலகத்திற்குட்பட்ட முதலாம்கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 9.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம்அபிவிருத்தி தொண்டர்கள் அனைவரையும் செய்முறைப் பரீட்சைக்குத் தயாராக வரும்படி உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (செ-232)

## கடற்றொழிலாளர் கூ.சங்கம்

(வண்ணார்பண்ணை)

புங்குடுதீவு மேற்கு பிரதேச கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் இப் பிரதேசத்தை உள்ளடக்கி ஐந்து கிராம சேவகர்கள் பிரிவைக் கொண்ட புதிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று நேற்று முன்தினம் பிராந்திய கடற்றொழில் பரிசோதகர் சோ. விக்கினேஸ்வரன் தலைமையில் அப்பகுதி கிராமசேவகர்களின் உதவியுடன் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இச் சங்கத்தின் தலைவராக க.தேசிங்கன், செயலாளராக சி.ராஜரத்தினம், பொருளாளராக ஆர். எட்வேட், உபதலைவராக பி. ஜெகதீசன் ஆகியோருடன் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. (உ-3-109)

## பாவனைப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன

(மானிப்பாய்)

யுத்த அனர்த்தங்களின் போது இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தால் வீட்டுப்பாவனைக்குரிய பொருட்கள் வழங்கப்படவுள்ளன. (செ-232)

## மாவட்ட ஆளுநர் யாழ். விஜயம்

(வண்ணார்பண்ணை)

சர்வதேச லயன்ஸ் கழக306 B மாவட்ட ஆளுநர் லயன்ஸ் உபாலி சமரசிங்க எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதிவரை யாழ்-மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (உ-109)

## பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிவடக்குப் பிரிவின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டமும் பிரிவுத் தேர்தலும் நாளை மு. ப. 10. 00மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் பிரிவுத் தலைவர் இ. எஸ். விஜயராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## மாவின் விலை நிர்ணயம்

(கொழும்பு)

அரசாங்கம், கோதுமை மற்றும் கோதுமை மாவிற்கான தேசிய பாதுகாப்பு வரியை நீக்கியுள்ளதுடன், கோதுமை மாவுக்கான மானியத்தை நிறுத்தியுள்ளதையடுத்து பொதுப்பாவனைக்கான கோதுமைமா கிலோ 18 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றதுடன்,

பிரிமா ரெட் கோதுமை மா கிலோ 17.50 ஆகவும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பிரிமா கிறீன் கோதுமை மா கிலோ 15.70 ஆகவும் விற்பனை செய்யப்படுவதாக பிரிமா சிலோன் லிமிடெட்டின் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கூட்டம்

(கொக்குவில்)

பாடசாலை, பட்டதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் சங்க உறுப்பினர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று பி.ப.3.00 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள உயர் பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் ஐந்து வலயங்களிலும் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலை இ. கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார். (செ-243)

## நிர்வாகசபை தெரிவு

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஒன்றியம் அமைத்தலும், நிர்வாக சபைத் தெரிவும் நாளை மு. ப. 10. 00 மணிக்கு யாழ்ப்பாணம் டி. எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரதேசசெயலகர் பிரிவிலும்உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் மன்றத்தில் இருந்து ஐந்து உறுப்பினர்கள் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-75)

## செஞ்சிலுவைச் சங்க பொதுக்கூட்டம்

(கொக்குவில்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறை பிரிவின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென ஊர்காவற்றுறைப் பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் எஸ். விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ-5,243)

## ஜெயாவின் தோழி நீதிமன்றில் ஆஜர்

(புதுடில்லி)

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயத்தை இந்திய வங்கியில் வைப்புசெய்த வழக்கு தொடர்பாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் நண்பியான சசிகலா நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

தோட்டம் வாங்குவதற்காக சசிகலாவின் நண்பியான சுசீலா வெளிநாட்டில் இருந்து ஒருலட்சத்து 99 ஆயிரத்து 610 அமெரிக்க டொலர்களை இந்திய வங்கியில் சட்டவிரோதமாக வைப்பிலிட்டமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்மீது வழக்கு தொடரப் பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் இந்த மாதம் 23 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளது.

எழுப்பூரில் உள்ள பொருளாதார குற்றவழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றில் இடம்பெறும் இந்தவழக்கு விசாரணைக்கு சசிகலா செல்லாத காரணத்தினால் 7 தடவைகள் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ -5)

## இன்று ஒரு தகவல்

# தொன்மை மொழி தமிழ்!

இந்திய மொழிகள் அனைத்திலும் நனிமிகத் தொன்மையானது நற்றமிழேயென்று 1958-6-23 ஆம் நாள் ஐதராபாத் நகரின் கண் 'பாரதி தமிழ்ச் சங்கத்தின்' கலாசார விழாவைத் தொடக்கி வைத்துப் பேசும்பொழுது அப்போதைய இந்தியகுடியரசுத் தலைவராகவிருந்த டாக்டர் இராசேந்திர பிரசாத் எழிலுறப் பாராட்டினார். அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு: 'இந்திய மொழிகள் எல்லாவற்றுள்ளும் தமிழ் மிக மிகத் தொன்மையானது. பிற மொழிகளை உருவாக்கி வருகின்ற காலத்திலே தமிழ் மொழியின் நடையும், சொற்களும் பெருமைப்படக்கூடிய அளவில் சிறந்து விளங்கி வந்திருக்கின்றன.

இந்தோ-ஆரிய மொழிகள் உட்படப் பிற மொழிகள் யாவும் வெறும் பேச்சு வழக்கில் மட்டுமிருந்து முழுவளர்ச்சியடைவதற்கு முன்பே தமிழ்மொழி சொல்வளம் பெற்று விளங்கி வந்திருக்கின்றது. முன்பென்பது, ஒரு துளசிதாசர், ஒரு சைதன்யர் தோன்றி, அம்மொழிகளை வளம்படுத்துவதற்கு முன்பென்பதாம். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தென்னிந்திய மக்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தமிழ்மொழியே தனிப் பெருங் காரணமாக இருந்திருக்கிறது.

பல்வேறு மொழிகளிடையே நெருங்கிய தொடர்பு கொள்ளுதல் வேண்டும். நம்முடைய கல்வித் திட்டத்தை விரிவுபடுத்தி மாநிலங்களுக்கிடையே உள்ள உறவை வளர்த்துக்கொள்ளும் பொழுது தென்னிந்திய மொழிகளை வட இந்தியர்கள் மிகுதியாகப் பயின்று வருவார்களென நம்புகின்றேன். உரிமை மக்களாக இன்று நாட்டை உருவாக்கும் பெரும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இப்பொழுது பல்வேறு மொழிகளுக்கிடையிலும் உள்ள தொடர்பு மிகுதிப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மொழியும் நாட்டின் ஒவ்வொரு பகுதியின் கண்ணும் வழங்கப்பட்டு வருகின்ற நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

மொழிச் சிக்கல்களால் அவ்வப்போது கருத்து வேறுபடுதலை யான் அறிவேன். நாட்டில் பேசப்படுகின்ற ஒவ்வொரு நாட்டு மொழியையும் வளர்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாதவொன்றென்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. இம்மொழிகளைப் புறக்கணித்தால் உண்மையில் நாட்டின் ஒற்றுமைதான் சீர்குலையும். பாரதி சங்கம் ஏற்பாடு செய்திருந்தது போன்ற சில விழாக்களில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். இத்தகைய வாய்ப்புகளை நான் முதன்மையாகக் கருதுகின்றேன். ஏனெனில் தமிழ்மொழியினையும் அதன் சிறந்த இலக்கியங்களையும் அறிந்து கொள்ளுவதற்குத் தக்க வாய்ப்பு ஏற்படுகின்றதனாலென்க

பாரதியார் நாட்டிற்குத் தொண்டு செய்யுமாறு பல்வேறு வழிகளாலும் மக்களைத் தட்டி எழுப்பித் தூண்டியுள்ளார். அவர்தம் பாட்டுக்கள் சிறந்ததெனப் பலராலும் பாராட்டப்படுகின்றன. அவர் தம் கட்டுரைகளில் நாட்டுப்பற்று மிளிர்கின்றது. இந்நிலையத்திற்குப் பாரதியாரின் பெயர் இட்டிருப்பதற்காகத் தமிழ் மக்களைப் பாராட்டுகின்றேன். பாரதி சங்கத்திற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'

செந்தமிழ்ச் செல்வி
குருகுலம்

# சாவகச்சேரி வைத்தியசாலை சிரமதானம் மூலம் துப்புரவு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரிகைத் தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

இப்பணியில் தென்மராட்சியிலுள்ள பொது அமைப்புகளின் தொண்டர்கள் பங்குபற்றுவார்கள் என வணிகர் மன்றத்தின் தலைவர் என்.சற்குணராஜா தெரிவித்துள்ளார். (உ-77)

# விதவைகள் வாழ்வு மேம்பாட்டுத் திட்டம்

(ஊர்காவற்றுறை)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கம், தீவுப்பகுதியில் 13 விதவைகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடனை வழங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கே இக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சர்வோதய சிரமதான இயக்கம், குறிப்பிட்ட இக் குடும்பச் சிறுவர்களின் போஷாக்கு மேம்பாட்டுத்திட்டம் ஒன்றையும் முன்னெடுத்துள்ளதுடன்,

இக்குடும்பங்களுக்கு மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபாவையும் வழங்கி வருகின்றது. (உ-75)

# கூ.அபி.ஆணையாளர் வன்னிப் பகுதிக்கு விஜயம்

(திருமலை)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களைப் பார்வையிடுவதற்கு வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்திஆணையாளர் அ.சுப்பிரமணியசர்மாவும்,உதவிஆணையாளர் செ.கு.சண்முகநாதனும் இம்மாதம் 4ம்திகதி திங்கட்கிழமை வன்னிக்குச் செல்லவுள்ளனர்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட நிரந்தர யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் முதல்தடவைய க இவர்கள் அங்கு செல்கின்றார்கள்.

வன்னிசெல்லும் இவர்கள் யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்துஅங்குஇயங்குகின்ற பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள்பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள்,மற்றும் இரண்டாம்படி கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றின் குறைபாடுகளை கேட்டறிந்து கொள்வார்கள். (வ)

# ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் காலத்திற்கு ஒவ்வாத கற்பித்தல் திட்டம்

## நடைமுறையில் இருப்பதாக கல்வி அமைச்சரிடம் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயில்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கு 25 வருடங்களுக்கு முற்பட்ட பாடத்திட்டங்களே கற்பிக்கப்படுகின்றன.

இத்தகைய பாடத்திட்டத்துக்கும் இன்றைய புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான பாடங்களுக்கும் எத்தகைய தொடர்புகளும் இல்லாமையினால் பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது விடயம் பற்றி தமிழாசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் த. பஞ்சலிங்கம் மூன்றாம் நிலை கல்வி அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பான பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என அவர் அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளார். (உ-77)

# நாளை நெஞ்சுறுத்தும் கானல்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு ''நெஞ்சுறுத்தும் கானல்'' என்னும் நாடகம் நடைபெறவுள்ளது.

தே. தேவானந்தின் நெறியாள்கையில் உருவாகிய இந்நாடகத்தின் கவிதைகளை கவிஞர் இ. முருகையன் யாத்துள்ளார். (செ)

# இராசி பலன்

2- 3- 2002
(மாசி 18,சனி)
திருதியை மு.ப.8.32 வரை
அத்தம் மு.ப.8.15 வரை
ராகுகாலம் 9.28-10.58
நல்ல நேரம் 3.28-4.58
சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்**
உடல் நலம்,தொழில் முன்னேற்றம், காரிய நன்மை, மனமகிழ்ச்சி.

**இடபம்**
வியாபார சிறப்பு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், திடீர் நன்மை.

**மிதுனம்**
மனச்சோர்வு, அற்பர் உறவு,காரிய தாமதம், புதிய தொழில் முயற்சி.

**கடகம்**
கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை,குடும்ப மகிழ்ச்சி.

**சிங்கம்**
தனலாபம்,வாக்கு கலகம், கௌரவக்குறைவு, காரிய தாமதம்.

**கன்னி**
ஜனவசியம், நண்பர்கள் உதவி,போசன சுகம், முயற்சி தாமதம்.

**துலாம்**
உறவினர் மனஸ்தாபம், முயற்சி தாமதம்,தனவிரயம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
காரியம் கைகூடும்,தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, உறவினர் வருகை.

**தனுசு**
சுபநிகழ்வு,அதிகபிரயாசை, தொழில் நன்மை, முயற்சி கைகூடும்.

**மகரம்**
புதிய திட்டமிடல், வயிற்றுக் கோளாறு, வீண்பயம், காரிய தாமதம்.

**கும்பம்**
எதிர்பாராத மனஸ்தாபம், உடல் நலக்குறைவு, காரிய தாமதம்,போசன சுகம்.

**மீனம்**
திடீர் பயணம், சுவாரஸ்யம், முயற்சி வெற்றியளிக்கும்,அபூர்வ சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்.

# சுழற்சி முறையில் சுய தொழில் முயற்சிக் கடன்

(மானிப்பாய்)

தொல்புரம் கிராம அபிவிருத்திச் சங்கம்,சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் தமக்குக் கிடைத்த நிதியைக் கொண்டு சுழற்சி முறையிலான சுய தொழில் முயற்சிக்கடன் திட்டத்தை சங்க உறுப்பினர்களிடையே அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆகிய சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வோருக்கே இக் கடன் உதவி வழங்கப்பட இருப்பதாக சங்கத்தலைவர் தெரிவித்தார். (உ-232)

# தொழில் நுட்பக்கல்லூரியில் நிரந்தர போதனாசிரியர் போதியளவில் இல்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் 24 வகையான பயிற்சி நெறிகளைப் பயில்கின்றபோதிலும், நிரந்தர போதனாசிரியர்கள், ஊழியர்கள் தேவையான அளவு இல்லாமையினால் பல பிரச்சினைகளை கல்லூரி நிர்வாகம் எதிர் நோக்கி வருகின்றது.

அத்துடன்,இங்கே பயில்கின்ற மாணவர்களுக்குப் போதிய தளபாட வசதிகளும் இல்லாத நிலையே காணப்படுவதுடன் சேதமடைந்த நிலையிலுள்ள தளபாடங்களைத் திருத்துவதற்கு நிதித் தட்டுப்பாடுபெரும்தடையாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1995ல் இடப் பெயர்வின் போது,கல்லூரியில் இருந்த பல கணனிகள் இல்லாமல் போய்விட்டதும்,பின்னர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்ட 6கணனிகளில் 4 பழுதடைந்து விட்ட நிலையில்,தற்போது 2கணனிகள் மட்டும் பாவனையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் தற்போது 17 நிரந்தர ஊழியர்களும் நூற்றுக்கும்மேற்பட்டவருகை விரிவுரையாளர்களும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரியில் நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக அண்மையில் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்த மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் ஹபீர் ஹமீரிடம் விரிவாக எடுத்துக்கூறப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (உ-77)

# முதியோர் அ. அட்டைகளை விரைவாகப் பெறலாம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 84 பேருக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ், வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் இவை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏனைய 65 வயதிற்கு மேற்பட்டோர் தத்தம் கிராம அலுவலருடாக முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-75)

## சிந்தனைக்கு விருந்து

### அகதி வந்தார்

படிக்கின்ற படிப்பும் இன்றிப்
பசிதீர்க்க உணவும் இன்றி
எடுக்கின்ற பொருளும் இன்றி
இரக்கின்ற மனமும் இன்றித்
தடுக்கின்ற மானம், நெஞ்சில்
தணல்கின்ற கோபம், சீவன்
விடுக்கின்ற ஆசை துன்பம்
விளைந்திட அகதி வந்தார்.

'பழையவன்'

## பொஸ்னிய இனப்படு கொலை
# முன்னாள் அதிபர் ஹரடிஷ்ஷை தேடி
# நேட்டோ படைகள் வலைவிரிப்பு

(குறோஷினி)
பொஸ்னியாவில் இனப்படு கொலை புரிந்த சேர்பிய அதிபர் ராடோவான் ஹரடிஷ்ஷை தேடி நேட்டோ படைகள் வலை விரித்துள்ளன.

பொஸ்னி -சேர்பிய இனங்களுக்கிடையிலான இனப்பூசலை அடுத்து ஐக்கிய நாட்டு சபையின் பாதுசாப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட செர்பனீச்சா பகுதியில் 7 ஆயிரத்துக்கும் அதிகமான பொஸ்னிய இன முஸ்லிம் ஆண்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

7 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றஇப்படுகொலைச் சம்பவத்தை அடுத்து 1996 ஆம் ஆண்டுமுதல் ஹரடிஷ் தலைமறைவாகியுள்ளார்.

ஹரடிஷ் தலைமறைவாகியுள்ளதாக சந்தேகிக்கப்படும் பொஸ்னியாவின் தென்பகுதியை நேட்டோ படைகள் சுற்றிவளைத்துள்ளன.

அவர் மறைந்திருந்ததாகக் கருதப்பட்ட பகுதியின் மூன்று இடங்களிலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவரைத் தேடிப்பிடிக்கும் வரை தேடுதல் நடவடிக்கை ஓயாது என்றும் நேட்டோ படைகளின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## சீவியம் நடத்த
# சாகசம் புரிந்த குடும்பம் சாவைத் தழுவியது

(வின்குக்)
சாகசம் புரிந்து சீவியம் நடத்தி வந்த குடும்பம்ஒன்று, சாகசச் செயலின் போது சாவைத் தழுவிக்கொண்ட பரிதாப சம்பவம் நமீபியாவில் நடைபெற்றுள்ளது.

தென்னாபிரிக்க நாடான நமீபியாவின் தென்பகுதியைச் சேர்ந்த 7 பேர் கொண்ட வறிய குடும்பம் ஒன்று, தமது வயிற்றுப் பிழைப்புக்காக பல்வேறு சாகசங்களை வீதியில் நிகழ்த்தி பார்வையாளர்களிடம் பணம் பெற்று வந்தது.

சம்பவதினத்தன்று 2பேரை மட்டுமே அடக்கக்கூடியஇரும்புப் பெட்டியொன்றில், தாம் 7 பேரும்இறுகமூடிக் கொண்டு அரைமணி நேரம் இருந்து காட்ட முடியும் எனக்கூறி அவ்வாறே செய்தனர்.

அரைமணி நேரம் கழிதது கூட்டத்தார் திறந்து பார்த்த போது 7 பேரும் பிணமாகக் காணப்பட்டனராம். (உ-7)

# உலக தரிசனம்

## சித்தார் கலைஞர்
# ரவிசங்கருக்கு மூன்றாவது முறையாக கிராமிய விருது

(புதுடில்லி)
இந்தியாவின் பிரபல சித்தார் இசைக்கலைஞர் ரவிசங்கர் மூன்றாவது முறையாக இசைத்துறைக்கான 'கிராமிய விருது' பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் நகரில் கடந்த புதன்கிழமை அவருக்கு இந்தவிருது வழங்கப்பட்டது.

சினிமாத்துறைக்கு வழங்கப்படும் ஒஸ்கார் விருது அளவுக்கு முக்கியதுவம் வாய்ந்த விருதாக இசைத்துறைக்கான 'கிராமியவிருது' அமைவது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## அமெரிக்க பத்திரிகையாளர் பேர்ள்
# கொலைக் குற்றவாளிகளை ஒப்படைக்குமாறு கோரிக்கை

(இஸ்லாமபாத்)
அமெரிக்கபத்திரிகையாளர் டானியல் பேர்ளின் படுகொலையில் சம்பந்தப் பட்டதாகக் கருதப்படும்தீவிரவாதிகளைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்காகேட்டுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தானிலுள்ளஅமெரிக்கத்தூதுவர் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அதேவேளை மேற்படி படுகொலையில் சம்பந்தப்பட்ட முக்கிய குற்றவாளிகளை நாடுகடத்தி, விசாரணைக்காக அமெரிக்காவிடம் ஒப்படைக்கும்படிகோரியதாகஅமெரிக்க தூதரகப்பேச்சாளர்தெரிவித்துள்ளார்.

இப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பேர்ளின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்களை விசாரணை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாகிஸ்தானிய பொலிஸாருக்கு தூதுவர் மென்டிஸ் சாம்பிளின் நன்றி தெரிவித்தார்.

குற்றவாளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையில் இல்லாவிடினும் குற்றவாளிகளை நாடு கடத்திய சம்பவங்கள் ஏற்கனவே நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

# ஜனாதிபதி தேர்தலில் முறைகேடு மடகஸ்காரில் வன்முறை வெடிப்பு

(அன்ரனனாறிவோ)
மடகஸ்காரில் வன்முறைகள் வெடித்ததில் 3பேர் பலியானதுடன் 50ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மடகஸ்காரில் கடந்த டிசம்பர்மாதம் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகள் நடந்துஎதிர்க்கட்சித் தலைவர் தோற்கடிக்கப்பட்டதைக் கண்டித்தே அவரின் ஆதரவாளர்கள் வன்முறையை தூண்டி விட்டுள்ளனர்.

கற்கள், தடிகள் மற்றும் வெற்றுப் போத்தல்கள் கொண்டு தாக்குதலில் ஈடுபட்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் றகாலோ மனானேயின் ஆதரவாளர்கள் அமைச்சர்களின் மாளிகைகளை தாக்கியுள்ளனர்.

இதேவேளை, தேர்தலில் தோல்வியுற்ற போதிலும் தானே புதிய மடகஸ்காரின் தலைவர் என்று றகாலோ மனானே பிரசாரம் செய்து வருகிறார்.

இதனையடுத்து தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாதிபதி ரஷ்ராஅகார் தனதுபதவியை இராஜினாமா செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச்மாதம் 24ஆம் திகதி மீண்டும்தேர்தல் நடத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்த போதிலும் எதிர்க்கட்சித்தலைவர் றகாலோ மனானேயும் அவரது ஆதரவாளர்களும் அதனை எதிர்த்து வருகின்றனர். (உ-7)

# கொங்கோ குடியரசில் எரிமலை அபாயம்

(பன்குய்)
மத்திய ஆபிரிக்க நாடுகளுக்குரிய கொங்கோ குடியரசில் மீண்டும்இரண்டாவது பாரிய எரிமலை வெடிக்கும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ் எரிமலையின் அடிவாரத்தில் உள்ள ஏரியில் கலந்துள்ள நச்சுவாயு பரவலாகப் பரப்புப்பட்டு கொங்கோ குடியரசில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 6 வாரங்களுக்கு முன் கொங்கோவின் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற எரிமலை வெடிப்பில் அருகில் உள்ள நகரம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## அல் கெய்டாக்கள்
# ஹஜ் பெருநாளை கொண்டாட அனுமதி

(குவான் தனாமோகுடா)
கியூபாவில் உள்ள குவான் தனாமோ கடற்படைத்தளத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த அல்கெய்டா கைதிகள் ஹஜ் பெருநாளைக் கொண்டாட அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படிகைதிகளுக்கு செம்மறியாட்டு இறைச்சியும் பேரீச்சம் பழமும் வழங்கப்பட்டன.

இதேவேளை ஆப்கானில் சிறைவைக்கப்பட்டுள்ள அல்கெய்டா மற்றும் தலிபான் கைதிகளுக்கும் இவ்வகையான ஆகாரம் வழங்கப்பட்டதுடன் இவர்களுக்கும் பெருநாளைக் கொண்டாடும் அனுமதியும் வழங்கப்பட்டது. (உ-7)

# மக்கள் கவலை

(ஊர்காவற்றுறை)
ஊர்காவற்றுறை பருத்தியடைப்பில் உள்ள இந்து மயானத்தினைப் பொதுமக்கள் பாவிப்பதற்கு கடற்படையினரிடம் முன் அனுமதி பெற வேண்டி இருப்பது குறித்து சம்பந்தப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இறந்த ஒருவரை தகனம் செய்ய மேற்படி இந்து மயானத்திற்குச் செல்வதாயின், இலங்கைக் கடற்படையின் பொதுசனத் தொடர்பு அதிகாரியிடம் முன் அனுமதி பெறப்படவேண்டியுள்ளது

இதேவேளை, மேற்படி இந்துமயானப் பகுதி இலங்கைக் கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

# விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் விளையாட்டில்
# ஊழலை ஒழித்துக்கட்ட புதிய திட்டங்கள் வகுப்பு

(டர்பன்)
அடுத்த வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின்போது இடம்பெறும் ஊழல்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை போட்டி அமைப்பாளர்கள் இப்போது இருந்தே ஆரம்பித்துள்ளனர்.

ஊழலை அடியோடு ஒழிப்பதற்காக போட்டி அமைப்பாளர்கள் புதிய திட்டங்களைத் தீட்டிவருகின்றனர்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் விளையாட்டுப் போட்டிகளின் போது, ரசிகர்கள் பந்தயம் கட்டும் முறை சட்டபூர்வமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளதால், சூதாட்டத்தை போட்டி அமைப்பாளர்களால் முற்றாக கட்டுப்படுத்த முடியுமா என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (உ-5)

## பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில்
# நான்கு சகோதரர்கள் அங்கம்வகித்துஉலகசாதனை

(இஸ்லாமாபாத்)
கிரிக்கெட் வரலாற்றில் முதல் தடவையாக ஒரேகுடும்பத்தை சேர்ந்த நான்கு சகோதரர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் அங்கம் வகித்துள்ளனர்.

ஹனிப் மொஹம்மட், பைஸால் மொஹம்மட், முஸ்டாக் மொஹம்மட் மற்றும் சதிக் மொஹம்மட் ஆகிய சகோதரர்களே பாகிஸ்தான் அணியில்அங்கம்வகித்து உலகசாதனை படைத்தவர்களாவர்.

இவர்களில் சதிக் மொஹமட்டை தரவி ஏனையோர் அணியின்தலைமைப்பதவியை வகித்துள்ளனர்.

சிறந்த துடுப்பாட்டவீரரான ஹனிப் மொஹம்மட் மேற்கிந்திய தீவுகள்அணிக்கு எதிரான போட்டியில் ஒரு இன்னிங்ஸில் 970 நிமிடங்கள் விளையாடி நீண்டநேரம் விளையாடிய வீரர் என்ற பெருமையையும் நிலைநாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

# கண்காணிப்புகுழுவின் பணி பத்து நாட்களுள் ஆரம்பம்

(லண்டன்)
நிரந்தரயுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் நோர்வேயின் முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர்ஜெனரல்ரொன்ட் பியூறுஹொல்டே தலைமையிலான கண்காணிப்புக்குழு, இன்னமும் பத்து நாட்களுக்குள் தனது பணியை ஆரம்பிக்கவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதை அடுத்து கண்காணிப்புக்குழு தலைவர் இன்று கொழும்பு வரவுள்ளார்.

கொழும்பு வரும், கண்காணிப்புக் குழுத்தலைவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துவிட்டு, வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் சந்தித்துகண்காணிப்பு பணியை ஆரம்பிப்பது தொடர்பாக பேசுவார் என தெரிவிக்கப்படுகிறது. (வ)

கருமம் செய ஒருவன் கைதூ-
வேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்
- குறள்

வலம்புரி

## பொங்குதமிழ் இங்கும் வேண்டும்

உலகத் தமிழர்களை 'பொங்கு தமிழ்' எழுச்சி கொள்ள வைத்தது. புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் தமக்குள்ள கடமையை உணரவைத்து எழுச்சியை ஏற்படுத்துவதில் 'பொங்கு தமிழ்' நிகழ்வு காத்திரமான பங்கை ஆற்றியுள்ளது. இப் பொங்குதமிழ் எழுச்சியை ஆரம்பித்து அதனைப் பரப்பிய பெருமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகசமூகத்தையே சாரும் இஃது நிச்சயம் தமிழர் வரலாற்றில் பதியப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி தற்போதுமட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் எழுச்சி பூர்வமாகநடை பெற்றுள்ளது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் இப் பொங்கு தமிழ் எழுச்சியில் கலந்து கொண்டு விடுதலைப்புலிகளின் தடையை நீக்க வேண்டும். அவர்களுடன் அரசு பேசவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடைய்ய புரிந்துணாவு ஒப்'பந்தம் ஏற்பட்டுள்ள இச் சூழ்நிலையில் தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் அணிதிரண்டுள்ளனர் என்பதைசர்வ தேசத்திற்கு குறிப்பாக புலிகளைத் தடைசெய்த நாடுகளுக்கு உணர்த்துவது தமிழர்களின் தலையாய கடமையாகும்.

கடந்த வருடம் யாழ் பல்கலைக்கழக சமூகத்தால் ஆரம்பிக்கப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் பொதுமக்களோ, பாடசாலைமாணவர்களோ கலந்துகொள்வதற்கு படையினர் அனுமதி வழங்கவில்லை. ஆனால் தற்போது அமைதியான சூழ்நிலைஏற்பட்டுள்ளதால யாழ் பல்கலைக்கழக சமூகம் அனைத்து மககளையும் திரட்டி பொங்கு தமிழ்எழுச்சியை யாழ்ப்பாணததில் அனுஷ்டிக்கவேண்டும். இது பொங்குதமிழை ஆரம்பித்துவைத்த யாழ். பல்கலைக்கழக சமூகத்திற்கு மகுடம் சூட்டுவதாக அமையும்.

# தமிழிசை உலகிற்கு நாடக நடிகர்களாற்றிய அரும் பெரும் சேவைகள் நினைவு கூரத்தக்கன

**மு. கடம்பநாதன்** எம். ஏ இசை

1918ஆம் ஆண்டில், நாடக மேடையில் பெரும் பகுதிபாடலாகவே இருந்தது. பாடத் தெரியவில்லையென்றால் அந்நாளில் நாடகக் குழுக்களில் எவரையும் சேர்த்துகொள்ளுவது வழக்கமில்லை. நாடகத்திலே வரும் எல்லா உறுப்பினர்களுக்கும் பாடல் இருந்த காலம் அது. எனவே, நாடக நடிகர் என்றால்பாடித்தான் தீர வேண்டும். இசைப் பயிற்சி அளிப்பதற்கென்றே நாடகக் குழுக்களில் ஆசிரியர்களும் இருந்து வந்தார்கள். அக்கால நாடக நடிகநடிகையரில் பலர் சிறந்த இசைப் புலவர்களாக விளங்கியது அனைவரும் அறிந்ததே.

மதுரைமாரியப்பசுவாமிகள் தமிழிசை இயக்கம் தொடங்குவதற்கு முன்னர் தமிழிசைக்குப் பெருந் தொண்டாற்றியவர். தமிழில் ஆயிரக்கணக்கான அருமையான பாடல்களை இயற்றியவர். அவற்றை இசை நிகழ்ச்சிகளில் தாமே இதயமுருகப் பாடிப் பரவசப் படுத்தியவர். அவரை தமிழ் இசை உலகுக்குத் தந்தது நாடக மாமேதை தவத்திரு சங்கரதாச சுவாமிகளின் சமரச சன்மார்க்க நாடக சபையாகும். எஸ். ஜி. கிட்டப் பாவும் அதே நாடக சபையில் சுவாமிகளிடம் பயின்றவர்.

### இசை நாடக ஒளி

பத்மஸ்ரீ கே. பி. சுந்தராம்பாள் அம்மையார் நாடக மேடையில் எஸ். ஜி. கிட்டப்பாவோடு இணையாக நின்று நடித்த நாடகங்களையும், அம்மையாரும் கிட்டப்பாவும் போட்டி போட்டுக் கொண்டு பாடிய பாடல்களையும் நிகழ்ச்சிகளையும்தமிழ்உலகம் இன்னும் மறந்திராது. இசை நாடக ஒளியாகத் திகழ்ந்து பெருமை பெற்ற எம். கே. தியாகராஜ பாகவதருக்கு இசையரங்குகளில் இருந்து வந்த முதன்மையை யாரும் மறுக்க முடியாது. இசைத் திறமையினாலேயே அவர் நாடக மேடையையும், திரைப்பட உலகையும்பல ஆண்டுகள் கவர்ந்து வந்தார். நாடக மேடையிலும் இசையரங்குகளிலும் தமிழிசை வளர்த்த பெருமை அவருக்கு உண்டு. அதேபோல்எஸ். வி. சுப்பையா பாகவதர் இசையுலகிலும் நாடக உலகிலும் ஒருங்கே இடம்பிடித்துப் பலஆண்டுகள் புகழ் பரப்பினார் என்பதைத் தமிழ் ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இசை- நடனம்- நாடகம்- ஹரிகதை ஆகிய துறைகளெல்லாம்ஒன்றுக்கொன்றுஇணைப்புடையனவாகும். நாடகப் புலவர்கள் இசையரங்குகளிலும் இசைப் புலவர்கள்நாடக அரங்குகளிலும் இடம்பெறுவது அந்த நாளில் சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்து வந்திருக்கின்றன. நாடகத்துறையிலிருந்த நாடகப் புலவர்கள் பலர்; நாட்டியம்- ஹரிகதை ஆகிய துறைகளிலும் கூட விற்பன்னர்களாக விளங்கினர். திருமதி சுப்புலட்சுமி அம்மையாரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். நாட்டிய கலை மாமணி கே. என். தண்டாயுதபாணி பிள்ளை பலஆண்டுகளுக்கு முன்பு நாடகக் குழுவில் நடிகராக இருந்தவர். சிறுவர் நாடகக் குழுக்களிலிருந்து தோன்றிய நடிகமணிகள் பலர். இசைப்பெரும் புலவர்களாக இருந்தனர். அவர்களிலே சிதம்பரம் இசைச் சித்தர் சி. எஸ். ஜெயராமன் முதன்மை பெற்றவர். மதுரை பாலமீனரஞ்சனி சங்கீத சபையிலே பயிற்சி பெற்றவர், அருமையான நடிகர், சிறந்த இசைமேதை சி. எஸ். ஜெயராமன் தமிழிசை வளர்ச்சியில் மிகுந்த ஆர்வமுடையவர். தஞ்சை டி. எம். தியாகராஜன் அவர்களையும் குறிப்பிட வேண்டும்.

### திரைப்படப் பின்னணி இசை

திரைப்படங்களில்பின்னணி இசைக் குழுவின் இயக்குநராக விளங்கிய பலர், தொடக்கத்தில் நாடகக் குழுக்களிலே பிரபல நடிகர்களாக இருந்தவர்கள்தாம், கலை மாமணி எஸ். வி. வெங்கட்ராமன், கி. இராமனாதன் என். எஸ். பாலகிருஷ்ணன் எஸ். எம். சுப்பையா நாயுடு, பி. எஸ். திவாகர் இவர்களெல்லாம் நாடக மேடையிலும் ஒரு காலத்தில் சிறந்து விளங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பலஆண்டுகளுக்கு முன் நாடகம் தெருக்கூத்தாக இருந்துவந்த காலத்திலேயே கஞ்சிரா மன் பூண்டியா பிள்ளை, புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை முதலிய மேதைகளெல்லாம் கூத்து மேடையில் மிருதங்கம் வாசித்தவர்கள் என்பதை அறியும் போது நமக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

மேற் கூறியவற்றையெல்லாம் பார்க்கும் போது நாடகமே இசையுலகிற்கு, அதிலும் சிறப்பாகத் தமிழிசை உலகிற்கு ஏராளமான நடிகர்களைத் தந்து உதவியிருக்கிறது என்பதையும், அவர்களில் பெரும்பாலோர் தமிழிசைவளர்ச்சிக்குதொடர்ந்து தொண்டாற்றி வந்திருக்கிறார்கள் என்பதையும், நினைவு படுத்திக் கொள்ள வேண்டியதுதமிழிசைச்சங்கத்தின்கடமையாகும்.

### இசை, நாடகத் தொடர்புகள்

தமிழ் நாடகமேடையை வளர்த்த தலைமை ஆசான் தவத்திரு சங்கரதாச சுவாமிகள், மகாவித்துவான்கஞ்சிரா மான்பூண்டியாபிள்ளையின் தத்துப்புத்திரர் என்பதை உணரும் போது, இசை உலகிற்கும் நாடக உலகிற்கும் இருந்து வந்த நீண்டகாலத் தொடர்பு நமக்கு நன்கு தெரிகிறது. தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு முன்பே நாடக மேடை மூலம் தமிழ் இசைவளர்த்த பெரியார்களில் குறிப்பிடத்தக்கவர்கள், சீர்காழி அருணாசலக்கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், சங்கரதாச சுவாமிகள் ஏகை. சிவசண்முகம்பிள்ளை என்போர் ஆவர்.

### கூத்துமேடைகளிலும் இசையரங்குகளிலும்

அருணாசலக் கவிராயரின் இராமநாடகம் கீர்த்தனைகளாகஇருந்தாலும் ஒரு சிறந்த இலக்கியமாகப் போற்றுதற்குரியது என்பதைப் புலவர்கள் ஒப்புக் கொள்வார்கள். அத்தீந்தமிழ்ப்பாடல்களைக்கூத்துமேடைகளில் மட்டும் பாடவில்லை, இசையரங்குகளிலும் நீண்டகாலமாகப் பாடி வருகின்றனர். கோபாலகிருஷ்ண பாரதியாரின் மேடைகளில் மட்டுமல்லாது இசையரங்குகளிலும் கதாகாலட்சேபங்களிலும் பல ஆண்டுகளாக இடம் பெற்று வருவதை நாம் எல்லோரும் அறிவோம். நந்தனார் கதையை நடிக்கத் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை நாடக மேடையில் கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்கள் தான் பாடப்பெற்று வருகின்றன என்பது அவருக்கு பெருமை அளிப்பதாகும். ஏகை. சிவ சண்முகனாரின்சம்பூர்ணஇராமாயணப்பாடல்கள் தென்னிந்திய இசைக்கலைக்கு மகத்தான சேவையைச் செய்துள்ளன என்று சொன்னால் மிகையாகாது. ஆபூர்வ இராகங்களில் அமைந்துள்ள அப்பாடல்களையெல்லாம் இராமாயணம், நாடகத்தை நடித்த நாடகக் குழுக்கள் அனைத்துமே கையாண்டு வந்தன என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

## சமாதான முயற்சிகளை சீர்குலைக்க வேண்டாம் அமைச்சர் ஆறுமுகம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளை குறுகிய அரசியல் இலாபம் கருதி சீர்குலைக்க வேண்டாம் என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் சம்பந்தப்பட்ட சக்திகளுக்கும், கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல வருட காலமாக நாட்டில் நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் காலம் நெருங்கி விட்டது. சகல இன மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என இது தொடர்பாக விடுத்த அறிக்கையில் அமைச்சர் கேட்டுள்ளார்.

இருதரப்பினரும் செய்து கொண்ட நிரந்தர யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் நன்மையடைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## அன்பளிப்பு

(மானிப்பாய்)

யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து வட ராட்சிப் பகுதியில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு ஊற்று நிறுவனம் இலவசமாகஅப்பியாசக் கொப்பிகள் வழங்கியுள்ளது. (செ-232)

## தினசரி தியானம்

### நல்லாரிணக்கம்


குற்றங் குறையக் குண மேலிட அருளை
உற்றவரே ஆவிக்கு உறவாம் பராபரமே.

-தாயுமானவர்

தீயைச் சார்ந்த இரும்பு தீ மயமாகிறது. நல்லாரைச் சார்ந்திருப்பவர்க்கு நலமெலாம் தானே வந்தமைகிறது. நலமுடையானே எனக்கு நல்லாரிணக்கம் நல்குவாயாக.

ஒரு நூலின் இழைகளைச் சிறுவன் ஒருவன் துண்டு துண்டாக அறுத்து விடுகின்றான். அவைகளை முறுக்கி வடமாக்கினால் அதன் வடிவு யானையைக் கட்ட வல்லதாகிறது. முறுக்கிய கயிறு போன்றது நல்லாரிணக்கம். ஒற்றுமையும் உறுதியும் அதினின்று வருகின்றன நெறி பிறழாது நல்லாரிணக்கம் நம்மைக் காக்கின்றது.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (18)

**தவக்காலம்-இரண்டாம் வாரம் (ஊதா)**

**திபா 103: 1 - 4, 9-12 'ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்'**

''கடவுளின் மன்னிப்பிற்குக் கரையில்லை'' என்பதுதான் இன்றைய மையக் கருத்து. ''குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும்'' என்பது சட்டத்தின் நீதி. இறைவனின் பேரன்போ இரக்கமாகி மனிதனை மன்னிக்கிறது. ''தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன்' என்கிறார் (எசா 49: 15 - 16) இறைவனின் பலவீனமே பாவிகளின் மனமாற்ற கண்ணீரில் தான் வெளிப்படுகிறது! கிறிஸ்து தன் சொல்லிலும் வாழ்விலும் இறைத்தந்தையின் இரக்க முகத்தைக் காட்டினார். நம்மிலே கடவுளின் இரக்க முகத்தை இந்த சமூகம் காண்பது எப்போது?

- காவலன்

## கஸ்தூரி
சீயாக்காய் பவுடர்





### விமானப் பயணிகள்...

சீட்டை பெற்றவர்களையும் நாளை 3ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும், மார்ச் இரண்டாந்திகதி (இன்று) 3வது விமானத்தில் பயணம் செய்ய பயணச் சீட்டைப் பெற்றவர்களை நாளைமறுதினம் 4ந் திகதி காலை 8 மணிக்கும், மார்ச் இரண்டாம் திகதி (இன்று) 4வது விமானத்தில் பயணம் செய்ய பயணச்சீட்டுப் பெற்றவர்களை 5ந் திகதி மாலை 4 மணிக்கும் பயண ஆயத்தங்களுடன் சிங்கள மகா வித்தியாலத்திற்கு வருகை தருமாறு சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது. (ந)

### வவுனியாவில்...

நகரப்பகுதி எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு பெரும் விழாக் கோலம் பூண்டிருந்தது. புரட்சிக் கீதங்கள் நகரில் ஒலிக்கவிடப்பட்டிருந்தது.

முக்கிய சந்திகளில் வாழை தோரணங்கள் கட்டப்பட்டு சிகரங்கள் பதாதைகள் வைக்கப்பட்டிருந்தன. நகரசபை மைதானத்தில் பிரமாண்டமான அளவில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம் வைக்கப்பட்டிருந்தது.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ள நாலாதிசைகளிலும் இருந்து வந்த மக்கள் வெள்ளம் நகரில் அலைமோதியது. நகர சபை மைதானம் சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கூட்டத்தினால் நிரம்பியிருந்தது.

நிகழ்வை வவுனியா பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் ஏற்பாட்டாளர் கே. அமிர்தலிங்கம் தொடக்கி வைத்தார். பொங்குதமிழ் ஈகைச் சுடர் தீபத்தை கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவடைந்த லெப்.கேணல் போர்க்கின் தாயார் ஏற்றிவைத்தார்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இராஜாகுகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோருடன் வன்னிமாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், யாழ்.மாவட்ட எம்.பிகள் எம்.கே.சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கொழும்பு மாவட்ட எம்.பிகள் மனோகணேசன், யோகராஜன், மற்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் ஆகியோரும் எழுச்சி நிகழ்வில் மக்களோடு இணைந்து கலந்து கொண்டனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக தமிழ்த் தேசிய இனம், மரவுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பதை வலியுறுத்தி பொங்குதமிழ் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

இதேவேளை பொங்கு தமிழ் நிகழ்வின் மூலம் வவுனியா மாவட்ட மக்களின் அபிலாசைகள் என்ன என்பதைச் சுட்டிக்காட்டி மகஜர் ஒன்றும், வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.நிகழ்வுகள் இன்று அதிகாலை வரை நீடித்த வண்ணம் இருந்தது. (வ-இ)

### பொதுநலவாய...

வருகின்றனர். இச் சம்பவங்கள் குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் தற்போதைய சூழ்நிலையில் நாட்டை விட்டு வெளியேற முடியாத கட்டாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-4)

### பருத்தித்துறையில் மறியல் போராட்டம்

(மந்திகை)

பருத்தித்துறை மத்திய மருந்தகத்தை நகரில் அதன் ஆரம்ப இடத்தில் அமைக்க வேண்டுமென்று கோரி நேற்று பருத்தித்துறை நகர சபைக்கு முன்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது.

நகரசபைக்கட்டிடத் தொகுதிக்கு முன்பாக காலை 6 மணியளவில் முன்னாள் நகர சபை உப தலைவர் பி.வின்செண்டிபோல் தலைமையில் கூடிய பொது அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் நண்பகல் வரை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நகரசபைப் பகுதிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தது.

கடந்த இரு நூற்றாண்டு காலமாக இயங்கி வந்த மருந்தகக் கட்டிடத்தை வேறோர் இடத்தில் அமைக்க திட்டமிட்டதாலேயே இம் மறியல் போராட்டம் இடம் பெற்றுள்ளது. (இ-23-245-4)


## மில்க்வைற் நீல சோப்

மேலுறைகளை சேகரியுங்கள்

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 3541


### பாசையூர்...

இறங்குதுறையை வந்தடைந்தபுலிகளை, 50ற்கும் மேற்பட்ட படையினர் வரவேற்றனர் புலிகள் சிங்களத்தில் படையினருடன் உடையாடியதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை பாசையூர்ப் பகுதிக்கு வந்த புலி உறுப்பினர்கள் யாழ். பல்கலைக் கழகத்திற்கும் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.(இ22-110)


## தேவை

அனுபவமுள்ள தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர், ரெலிபோன் இயக்குனர் தேவை. சுய விபரங்களுடன் 07.03.2002 க்கு முன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல – 238
மே/பா, வலம்புரி,
யாழ்ப்பாணம்.
[4757]

## நடமாடும் சட்ட உதவியும் சட்ட ஆலோசனையும்

கியுடெக் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சட்ட உதவியின் ஆலோசனைகள் திட்டமிட்ட படி குறிப்பிட்ட இடங்களில் இன்று 02.03.2002 தொடக்கம் 05.03.2002 வரை நடைபெறும்.

யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம்
[4762]

## A/L 2002/2003/2004

பிரத்தியேக வகுப்புக்கள்
இன்று ஆரம்பம்

தமிழ் - திரு. பா. மகாலிங்கசிவம்
இந்து நாகரிகம் - திரு. S. சிவானந்தன்

கணித, விஞ்ஞான வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[4753]

## புக் பயிண்டிங்

சகல விதமான புத்தகங்களும் நவீன முறையில் கட்டிக் கொடுக்கப்படும்.
ராஜ் புக் பயிண்டிங் சென்றர்
43, பலாலி வீதி,
கந்தர்மடம்.
[4760]

## தவறிவிட்டது

ஞானபாலசிங்கம் யாழினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 827571636V), விசேட அடையாள அட்டை (இல. 0903030028) என்பன யாழ். பஸ் நிலையத்திற்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
J.T.I.
இல.7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது
J.T.I.
11/10B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

## CHURCH OF CEYLON - CENTRE FOR LEARNING AND CULTURE

இலங்கைத் திருச்சபையின் மாணவர் கல்வி முன்னேற்ற திட்டத்தின் பாடநெறிகள்

யாழ். மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு கீழ் வரும் பாடநெறிகள் இலவசமாக கற்பிக்கப்படவுள்ளன.

1. மாணவர்களுக்கான விசேட ஆங்கிலம். Spoken English
   a) 4ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை
   b) 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை
2. நடனம்
3. வயலின்
4. வீணை
5. சங்கீதம்
6. மிருதங்கம்
7. Piano
8. மனையியலும் தையலும்

ஒவ்வொரு நெறிக்கும் 30 மாணவர் மட்டும் தெரிவு செய்யப்படுவார்கள்.

கற்பிக்கப்படும் இடம்: தில்லையம்பலம் நினைவு கட்டடம்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி.

விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளும் இடம்:
பரி.யோவான் ஆலய காரியாலயம்,
452, பிரதான வீதி, சுண்டிக்குளி.

விண்ணப்ப முடிவு திகதி: 09.03.2002

திரு. D.R. அருமைநாயகம்
Director

வண. S.P. நேசகுமார்
Archdeacon of Jaffna
[4759]

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

### மாபெரும் சிரமதானப் பணி - ②

*இடம்:* சாவகச்சேரி அரசினர் பொது வைத்தியசாலை
*காலம்:* நாளை (03.03.2002) ஞாயிறு காலை 8.00 மணி

சாவகச்சேரி அரசினர் பொது வைத்தியசாலை நிர்வாகத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ நடராசா இரவிராஜ் அவர்களின் அனுசரணையுடன் கௌரவ இந்து கலாச்சார அமைச்சரின் சிறப்பு வருகையுடன் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் முன்நின்று நடாத்தும்மாபெரும் சிரமதானப் பணி ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் வர்த்தக சங்கங்கள், பொதுமக்கள் அனைவரையும் ஒன்றிணைந்து எமது வைத்தியசாலையை கட்டியெழுப்ப அன்புக் கரம் கொண்டு அழைக்கின்றோம்.

குறிப்பு:
1. சிரமதானப் பணிக்கான உபகரணங்களோடு கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் வேண்டுகின்றோம்
2. சிரமதான நிகழ்வின் முடிவில் எமது வணிகர் மன்ற அங்கத்தவர்களின் வியாபார ஸ்தாபனங்களை இயக்குவது சம்மந்தமாக புனர்வாழ்வு (RRAN) பகுதியினருடன் முக்கியமான கலந்துரையாடல் இடம் பெற இருப்பதால் தவறாது சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.
3. சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கடைக் கட்டிடத்தில் (நவீன சந்தை தவிர்ந்த) இருக்கும் நிலை, கதவுகள், தளபாடங்கள், உட்பட அனைத்து உடைமைகளையும் (பெட்டிக் கடை உட்பட) இன்றிலிருந்து 10 தினங்களுக்குள் வர்த்தக சங்க அனுமதியுடன் அகற்றி உதவி புரியுமாறு வேண்டுகின்றோம்.

*– சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் –*
[C/3616]

பின்வரும்
பாட நெறிகளுக்கான
விரிவுரைகள்
இன்று
ஆரம்பமாகின்றன

*கலைமாணி (பேரோதனை)* B.A.
*வணிகமாணி* B.Com. III

பட்டப்படிப்புக்கள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.
[4752]

## புலமைப் பரிசில் 2002

பயிற்சிப் பரீட்சை 22ல் பரிசுக்குரிய மாணவர்கள்

- ✸ வி. தீபன்ராஜ் 175 (ஆனைப்பந்தி மெ. மி. வி.)
- ✸ வ. தனயன் 171 (யா/ இந்து ஆ. பா.)
- ✸ தி. கஜலக்ஷி 162 (யா/ திருக்குடும்ப க. ம.)

அடுத்த பரீட்சை
03.03.2002 ஞாயிறு
பரீட்சை இரு நேரங்களில்
காலை 08.30, காலை 10.30

புலமைப் பரிசில் - 2002
புதிய வகுப்பு பிரிவு II ஆரம்பம்
02.03.2002 சனி

*தரம் 1 முதல் O/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.*

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நீர்வேலி பிரதேச சபையால் இரண்டரை லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட தங்குமடம் அறை, மழைக்காலக் கொட்டகை முதலியவற்றின் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை (03.03.2002) பகல் 10.00 மணியளவில் நீர்வேலிப் பிரதேசசபைத் தலைவர் பி. குணசிங்கம், உப தலைவர் யு.எல்.ஏ. ரவி ஆகியோரால் நாடா வெட்டி மக்கள் பாவனைக்காக திறந்து விடப்படும். இதைத் தொடர்ந்து மயான அபிவிருத்திச் சபையின் கூட்டமும் நடைபெறும்.

இத்துடன் செம்மணி ஓமக்கான வைரவ சுவாமி ஆலய அடிக்கல் நாட்டு விழாவும் வைரவ சுவாமியின் அடையாளமான சூலமும் நிறுவப்படும்.

ஆகவே இவ்விழாவில் மயான பாவனையாளர்கள், சமூக சேவை, கிராம அபிவிருத்தி நிலையங்களின் உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் அனைவரும் பங்கு பற்றி சிறப்பிக்க வேண்டுகிறோம்.

கு. கையிலாயபதி
தலைவர்.

லயன். வல்லிபுரம் பரமசிவம் ஜே.பி.
கௌரவ செயலாளர்.

இ. தணிகைநாதன்
பொருளாளர்.
[C/3617]


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.